-குறள்நெறி ஓங்கின் குடியரசு ஓங்கும்-

மின்னிதழ்:121-மார்கழி-1---தி.பி.2056 *திசம்பர்—16--- பொ.ஆ.2025*

நிறுவுநர்: செந்தமிழ்மாமணி சி.இலக்குவனார்



நூலக நாயகம் வே.தில்லைநாயகம்

பொதுநூலகத்துறையில் இவர் இயக்குநராகப் பணியாற்றிய காலம் அத்துறையின் பொற்காலம் எனப்படுகிறது. ஏனெனில், இவர் நூலக ஆணைக்குழுவின் அமைப்பை மாற்றியமைத்து நூற்கொள்முதல் முறையில் ஒற்றைச் சாளர முறையை அறிமுகப்படுத்தினர். பதிப்பாளரின் முகத்தைப் பார்க்காமல் நூலின் அகத்தைப் பார்த்து நூல்கள் வாங்கினார். தான் நேர்மையாளராக இருந்து மட்டுமல்லாமல் பிறரையும் நேர்மையாளராக மாற்றினார். உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து பொதுநூலக வரியை உரியகாலத்தில் பெற்றார். ஆண்டுதோறும் நூற்றொகையை வெளியிட்டார். பொதுநூலகர்களை அரசுப்பணியாளர்களாக ஆக்கினார். தற்பொழுது ஆண்டுதோறும் மாநிலமெங்கும் நடைபெறும் புத்தகத்திருவிழாவிற்கு முன்னோடியாக, சென்னை இராசாசி அரங்கில் ஆண்டுதோறும் தேசியநூலக வாரத்தில் புத்தக்கண்காட்சிகளையும் நூலறிமுக விழாக்களையும் நடத்தினார்.

சிறப்பாசிரியர் குழு: முனைவர் பொற்கோ (முன்னைத் துணைவேந்தர், சென்னைப்பல்கலைக்கழகம்) முனைவர் இ.சுந்தரமூர்த்தி (முன்னைத் துணைவேந்தர், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம்) முனைவர் இர.பிரபாகரன் (மேரிலாந்து,அமெரிக்கா) முனைவர் அன்புசெயா (சிட்னி,ஆத்திரேலியா) பாவலர் முரசு நெடுமாறன் (மலேசியா) பேரா.மன்னர்மன்னன் (மலேசியா) பேராசிரியர் பெஞ்சமின் இலெபோ (பிரான்சு) கவிஞர் அழ.பகீரதன் (இலங்கை) கலாநிதி சயந்தினி விக்னராசன் (இலங்கை) பொறியாளர் ச.இராசகுமாரன் (அயர்லாந்து) எலியாசு (சிங்கப்பூர்)திருமதி.மதிவதனி பத்மநாதன் (சுவிட்சர்லாந்து) திருமதி.தாமரை சீனிவாசராவ் (கம்போடியா) முனைவர் இராம சுந்தரம் (கொரியா) தீனதயாளன்(கனடா) பேராசிரியர் தமிழியலன் (சென்னை) இணையாசிரியர்; பாவலர் செல்வ.மீனாட்சிசுந்தரம்

பொறுப்பாசிரியர்: மறைமலை இலக்குவனார்

தேசியநூல் திருக்குறள்

நூலகமாமணி வே. தில்லைநாயகம்

1 என்ன ஏன் எப்படி?

நாம், நமக்கென்று ஒரு தேசிய அரசமைப்பை எழுதிக்கொண்டோம்; ஒரு தேசியக்கொடி, ஒரு தேசியச்சின்னம், ஒரு தேசியப்பாடல், ஒரு தேசியவாழ்த்து, ஒரு தேசியப்பஞ்சாங்கம், ஒரு தேசியத்தாவரம், ஒரு தேசியப்பறவை, ஒரு தேசிய விலங்கு ஆகியவற்றைத் தேர்ந்து, ஏற்று, அறிவித்து உள்ளோம். இதுவரை ஒரு தேசிய நூல் அறிவிக்கப்படவில்லையே ஏன்?

2 இலக்கணம்

தேசிய நூல் என்றால் என்ன? அதன் இலக்கணம் என்ன? சுருங்கச்சொன்னால் அரசமைப்பில் வரும் முகப்புரை, நெறிமுறை நேர்வு, உரிமைகளின் உறைப்பு, கடமைகளின் கட்டுப்பாடு, சட்டமை, செயன்மை, நீதிமை நடைமுறை ஆகியவற்றை எடுத்துக்காட்டுவதாக, வலியுறுத்துவதாக, விளக்குவதாக அமையவேண்டும். அப்படி என்றால் முன்சொன்னவை மொழிவது என்ன?

3 முகப்புரை

நமது அரசமைப்பின் முகப்புரையானது அரசாண்மை, சமநலமை, சமயச்சார்பின்மை, மக்கள் அரசு, நீதிமை, தன்னுரிமை, சமன்மை, ஒற்றுமையும் ஒருமைப்பாடும், உடன்பிறப்புணர்வு ஆகிய 9 முனைப்புக்கூறுகளை கூறுகிறது. இந்த 9 முனைப்புக்கூறுகளையும் ஏற்பதாக, இயக்குவதாக இருக்கவேண்டும் தேசியநூல்.

4 நெறிமுறை

நெறிமுறைக்கோட்பாடுகள் (சட்டக்கூறுகள் 36-51) காந்திய அடிப்படையில் 6 நெறிகளையும் பொருளாதார நெறியில் 7 நெறிகளையும் உலக உறவுப்போக்கில் 4 நெறிகளையும் பிறமுறையில் 3 நெறிகளையும் திருத்திச்சேர்த்த வகையில் 4 நெறிகளையுங்கொண்ட 24 கோட்பாடுகள் கொடிகட்டிப்பறக்கவிடுகின்றன நமது அரசமைப்பில். இவற்றை ஏற்று இயக்குவதாக இருக்கவேண்டும் தேசிய நூல்.

5 அடிப்படை உரிமை

சமன்மை உரிமை (சட்டக்கூறுகள் 14-18), சுதந்தர உரிமை (19-22), சுரண்டல் தடுப்பு உரிமை (23 -24), சமய உரிமை (25-28), கல்வி - பண்பாடு உரிமை (29-31), அரசமைப்புத் தீர்வழிஉரிமை (32-35), சொத்துரிமை (37) ஆகிய 7 வகை உரிமைகளைக் கூறுகிறது அரசமைப்பு. இவற்றை ஏற்று இயக்குவதாக இருக்க வேண்டும் தேசியநூல்.

6 அடிப்படைக்கடமை

தேசிய அடையாளம், சுதந்திரப்போராட்டம், அரசாண்மை, தேசப்பாதுகாப்பு, உடன்பிறப்பு உணர்வு, மரபு, சுற்றுச்சூழல், சொத்து, அறிவியல், மாட்சிமை ஆகிய 10 கடமைகளை அடிப்படைக் கடமைகளாக அரசமைப்பு அறிவிக்கிறது சட்டக்கூறு 51 A மூலம். இந்த 10 கடமைகளையும் ஏற்று, போற்றி, புரப்பதாக இருக்க வேண்டும் தேசியநூல்.

7 நிர்வாக நியமம்

அரசு, ஆட்சித்தலைவர் ஆகியவற்றின் இலக்கணம் (சட்டக்கூ 52-73), அமைச்சர்களின் இலக்கணம் (74-75), நயன்மையர் நயப்பு இலக்கணம் (124-147) நிதி, சொத்து, வணிகம் முதலியன (268 -307), அரசாங்க அலுவலர் (308-323) ஆகியனபற்றி விதந்து ஓதுகிறது அரசமைப்பு. அவை அனைத்தையும் ஏற்று, போற்றிப் புரக்க வேண்டும் தேசிய நூல்.

8 இருக்கும் நூல்கள்

முன்கண்ட தேவைகளை எடுத்துரைக்கும் நூல்கள் நம்மிடம் உள்ளனவா இல்லையா? ஏராளமாக இருக்கின்றன; சுருதி, சுமிருதி, இதிகாசம், புராணம், ஆகமம், தரிசனம் என்ற தலைப்புகளில் ஏராளமாக இருக்கின்றன. எனினும் சமயச்சார்பு இல்லாமல், பழமை பரந்து, நிகழ்மை நேர்ந்து, அதிர்மை ஏற்கும் நூல் ஏதாவது இருக்கிறதா? இருக்கிறது என்று சொன்னால் ஆச்சரியமாய் இருக்கும். அதுவும் அனைவரும் அறிந்தது என்று சொன்னால் அதைவிட வியப்பாய் இருக்கும்? அது எது?

9 திருக்குறள்

அதுதான் திருக்குறள். திருக்குறள் பாக்களை முகப்புரை முனைப்புகளுடன் பொருத்திப் படித்தால், நெறிமுறைகளுடன் நெருக்கிநோக்கினால், அடிப்படை உரிமைகள் அருகில் அமைத்து ஆய்ந்தால், கடமைகளுடன் கருதினால், நிர்வாக நியமங்களுடன் நேராகவைத்து அலசினால் தேசிய நூலாக அமைய, ஏற்க, இயங்க ஏற்புடையது என எல்லோரும் ஒப்புவர். இதன் தொடர்பாகச் சில எடுத்துக்காட்டுகள் காணலாம்.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. (523)

என்னும் குறள் சிந்தனை உரிமையை உரைக்கிறது.

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு. (392)

என்னும் குறள் கல்வி உரிமையின் பெருமையைப் பேசுகிறது.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்; சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான். (972)

என்னும் குறள் சமன்மை சாற்றுகிறது.

விரைந்து தொழில்கேட்கும் ஞாலம்; நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின். (648)

என்னும் குறள் பேச்சுரிமையின் பெருமையைப் பேணுகிறது.

முயற்சி திருவினை யாக்கும்; முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும். (616)

என்னும் குறள் உழைப்புரிமையின் மேன்மையை மொழிகிறது.

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான். (1062)

என்னும் குறள் வறுமை ஒழிப்பை வற்புறுத்துகிறது.

படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு. (381)

என்னும் குறள் அரசின் - ஆட்சித்தலைவரின் தன்மையைத் தருகிறது.

கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு. (631)

என்னும் குறள் அமைச்சர் இலக்கணம் அலசுகிறது.

ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மட்டும்
தேர்ந்து செய் வஃதே முறை. (541)

என்னும் குறள் நீதிமை நெறி உரைக்கிறது.

உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு. (734)

என்னும் குறள் நாட்டு இலக்கணம் இயம்புகிறது.

(தில்லைநாயகம் வே, இந்திய அரசமைப்பு,
மணிவாசகர் பதிப்பகம், சென்னை,
முதற்பதிப்பு 1989, பக்கம் 271-275)

ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனின்
அன்றென்ப வாறு சமயத்தார் -நன்றென
எப்பா லவரும் இயைபவே வள்ளுவனார்
முப்பால் மொழிந்த மொழி   (திருவள்ளுவமாலை 9)

என்னும் கல்லாடனாரின் கருத்துரை திருக்குறளின் சமயங்கடந்த தன்மையைச் சாற்றுகிறது.
இதன் காரணமாகத்தான் திருக்குறள் இந்திய மொழிகளில் மலையாளம் (1875), தெலுங்கு (1906), சமஸ்கிருதம் (1923, இந்தி (1924), பெங்காலி (1939), கன்னடம் (1940), மராத்தி (1948), உருது (1965), குசராத்தி (1971) ஆகிய மொழிகளில் மொழியாக்கம் பெற்று உள்ளது நூறாண்டுகளுக்கு முன்பிருந்தே.
அதுமட்டுமன்று, உலகமொழிகள் பலவற்றில் செர்மனியம் (1803), ஆங்கிலம் (1840), பிரஞ்சு (1848), இலத்தீன் (1856), செக் (1952), உருசியம் (1956), போலியம் (1958), பர்மியம் (1964), பிஜியம் (1964), டச்சு (1964), சிங்களம் (1967), சீனம் (1967), மலாய் (1967), சுவீடியம் (1972), பின்னியம் (1972) ஆகியன போன்ற மொழிகளில் மொழியாக்கம் பெற்றுள்ளது 200 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே.
“தேசியநூல் திருக்குறள்” என்னும் ஒருதனி நூலே - ஆராய்ச்சி நூலே - எழுதலாம்; பட்டம் பெறலாம்; பதவி பெறலாம்; பணம் பெறலாம்; புகழ் பெறலாம்; பாராட்டுப் பெறலாம்; பாராட்டுக்குரியவர் யாரோ எவரோ?
10 நடப்பு எனவே அரசமைப்பில் அக்கறையும் தேசியநூலில் அக்கறையுங்கொண்ட ஒவ்வொருவரும் திருக்குறளைத் தேசியநூலாக ஏற்க, பயன்படுத்த, பயன்பட இனம், சமயம்,சாதி, கட்சி கடந்து முயலவேண்டும். முயல்வோமா?


THIRUKKURAL in English – Maraimalai Ilakkuvanar
THIRUKKURAL
in English
Maraimalai Ilakkuvanar


Glimpses of
Thirukkural
Prof. Maraimalai Ilakkuvanar


The Dream of a Chozha King
(Kalki's Parthiban Kanavu)
CHAAR
Maraimalai
Ilakkuvanar


Silappadikaram Retold - Maraimalai Ilakkuvanar
SILAPPADIKARAM
RETOLD
CHAAR
Centre for History And
Archaeological Research
Maraimalai Ilakkuvanar